1973 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு அல்ல. போர்டு ஆப் ரெவினியுதான் சிபாரிசு செய்திருக்கிறது. ரெவினியூ போர்டு மெம்பர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் கொடுத்த அறிக்கையின்பேரில் தான் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது.

Bridge works in Ambasamudram area

* 91 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the stage at which the construction of the bridges across Gatana river and Vowal Odai in Ambasamudram in Tirunelveli district stands?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ்விரு பால வேலைகளுக்கும் 1971-ம் ஆண்டு அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வேலைகளின் திருத்திய மதிப்பீடுகள் அரசு ஒப்புதலுக்காகத் தலைமைப் பொறியர் தயாரித்துக் கொண்டிருப்பதால் இன்னும் இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

சிவகெங்கைசெட்டி ஊரணி

* 92 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கையில் உள்ள செட்டி ஊரணி கரையை உயர்த்தி ஆழப் படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. தேவேந்திரன்: தலைவர் அவர்களே, 16, 17 ஆண்டுகளுக்கு முன்பு அங்கே தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு 21 மைல் சுற்றளவிலே இருந்தாலும் மக்கள் செட்டி ஊரணிக் கரையிலேயிருந்து குடிநீர் எடுத்துக்கொண்டு போனார் கள். அந்தப் பகுதிக்கு மிக முக்கியமானது இந்த ஊரணி. எனவே மறுபடியும் பரிசீலித்து, அந்த செட்டி ஊரணிக் கரையை ஆழப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, சிவகங்கை நகராட்சிக்குச் சொந்தமான செட்டி ஊரணிக் கரை ஏறத்தாழ 115 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. அதில் தண்ணீர் தேங்கி இருக்கும் பகுதியின் அளவு

6.4 ஏக்கராகும். வறட்சி நிவாரணம் ஏற்பட்டபொழுது ரூ. 1,50,000 செலவில் ஊரணித் தண்ணீரைக் கொண்டு நகராட்சிக்கு நீர் வழங்கும் திட்டம் துவங்கப் பட்டது. அதில் 8 குடிநீர்க் கேணிகள் செயல்படுகின்றன. வறட்சி நிவாரணப் பணிகள் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாகத் தண்ணீர் வழங்கும் திட்டம் ரூ. 1 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(திரு. ஆ. பரந்தாமன் கேள்வி கேட்க எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிவகங்கை செட்டி ஊரணியைப் பற்றி மட்டும்தான் கேள்வி கேட்கவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ்நாட்டிலேயிருக்கிற சிறிய ஊர்கள் 'மைனர் இரிகேஷன்' ஸ்கீமின்கீழ் வருகின்றன. அவற்றை அங்கங்கே இருக்கிற ஊராட்சிகள்தான் பராமரிக்க வேண்டியிருக்கிறது. நிதிநிலை சீராக இல்லாமையால், நகராட்சிகளால் அவற்றைப் பராமரிக்க முடியவில்லை. அவற்றையெல்லாம் பொதுப்பணித் துறையிலே இணைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

House sites for landless in rural areas

* 93. *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Central Government have given financial assistance to the State Government under the scheme for provision of house-sites for the rural landless; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலமற்ற கிராமத் தொழிலாளர்களுக்கு கீழே விவரித்துள்ளபடி வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்திற்காக இந்திய அரசு ரூ. 75.51 லட்சம் மானியம் அனுமதித்துள்ளது.

(1) 548 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் செலவு ரூ. 25,07,000 செலவு.